

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி.ஸ்கேன் மையம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக கூடுதல் கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் தி.மு.க. மாவட்ட கமிட்டி கூட்டம் திருப்பத்தூர் சி.கே.சி. மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் மாவட்ட ஆவின் தலைவர் எஸ். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்தீசீனிவாசன், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், மாநில நிர்வாகிகள் கே.புருசோத்தமன், பி.எம்.முனிவேல் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### எத்தனை சோதனைகள் மேற்கொண்டாலும்

# நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றியைத் தடுக்க முடியாது!

## அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!

கரூர், மே.31-

எத்தனை சோதனைகள் மேற்கொண்டாலும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றியை தடுக்க முடியாது என அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கூறினார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

வருமான வரித்துறை சோதனை நடைபெறும் நிறுவனங்கள் எல்லாம் நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது உள்ள நிறுவனங்கள். எனக்கு வேண்டியவர்கள் அவர்களது நண்பர்கள் என செவி வழி செய்தியாக எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெறுகிறது என செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. வருமானவரிச் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம். சோதனைகள் முடிந்த பிறகு முழு விவரங்கள் தெரியவரும். சுவர்



ஏறி குதித்து உள்ளே வந்தது. இரண்டு பெரிய பைகளை கொண்டு வந்ததன் காரணமாக கேள்விகள் கேட்கப்பட்டு வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது.

யார் வீட்டிலும் திடீரென்று உள்ளே நுழையும் போது அடையாள அட்டை காண்பியுங்கள் என்று கேட்பது வழக்கம். கதவை தட்டும் போது நீங்கள் யார் என கேட்டு கதவை திறப்பது வழக்கம். அந்த அடிப்படையில் மாவட்ட காவல் அதிகாரி தகவல் இல்லை என கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ளாமல் விமர்சித்துள்ளார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கு லாயக்கற்றவர். வேலுமணி போன்றவர்கள் வீட்டில் சோதனை நடைபெற்ற போது கட்சிக்காரர்களை அங்கே கொண்டுவந்து குவித்து மூன்று வேளை அவர்களுக்கு சாப்பாடு அளித்து போக்குவரத்துக்கு இடையூறு செய்து அதிகாரிகள் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தது போல இங்கு எதுவும் நடைபெறவில்லை.

சந்தேகப்பட்டு அங்கு வந்தவர்களையும் உடனடியாக அங்கிருந்து செல்லுமாறு கூறி தற்போது சோதனை சுமூகமாக நடைபெற்று வருகிறது.

சொந்த தொகுதியிலேயே வெற்றி பெற முடியாமல் தோல்வியடைந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டவர் ஜெயக்குமார். தொலைக்காட்சிகளில் காமெடியனாக வந்து போய்க்கொண்டிருக்கிறார். அவரது கூற்றுக்கெல்லாம் நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது தலைவர் தளபதி அவர்கள் மகள் வீட்டிலேயே சோதனை நடத்தினார்கள் அதனை இயல்பாக எடுத்துக் கொண்டு வெற்றிகரமாக பிரச்சாரத்தை முடித்து வெற்றி பெற்றவர் தான் தளபதி அவர்கள். சட்டமன்றத் தேர்தலின் போது நான் வாக்கு சேகரித்துக் கொண்டிருந்த சமயத்தில் ரைடு நடத்தினார்கள். எத்தனையோ ரெய்டுகளை சந்தித்து இருக்கிறேன். இன்னும் எத்தனை ரைடு வந்தாலும் சந்திப்பேன். ஓராயிரம் சோதனைகளை நடத்தினாலும் சரி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகின்ற நலத்திட்டங்களினால் இந்த அரசுக்கு மிகப்பெரிய வரவேற்பினை மக்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு மிகப்பெரிய வரவேற்பினைபெற்றிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 தொகுதியிலும் நாங்கள் வெற்றி பெறுவதை எத்தனை ரைடு நடத்தினாலும் தடுக்க முடியாது என்றார்.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும்

# தி.மு.க. தொழிலாளர் அணியினர் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

## மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 31 -

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் 27-5-2023 அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் பிடிசி.வெ.பாலு, இ.ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், மு.ராஜகாந்தம், ஆர்.வரதன், சேலம் சி.காசிநாதன், கோவை நா.தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஒய்வில்லாச் சூரியனும் தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு தொழிலாளர்கள் நலனை முன்னிருத்தி, அத்தொழிலாளர்களுக்காக பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அளித்து, தொழிலாளர்களின் பாதுகாவலனாகவும் - தொழிலாளர்களின் தோழனாகவும் இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 ஜூன் 3ஆம் நாள் தொடங்குவதனை யொட்டி;

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின்படி;

தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பாக மாவட்டந்தோறும் ஒவ்வொருவரின் நெஞ்சிலும் நிலைத்திடும் வகையில், 2023 ஜூன் 3ஆம் தேதி முதல் 2024 ஜூன் 3ஆம் தேதி வரையிலான ஓராண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா வினை கொண்டாடுவது எனவும்; புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணியின் நிர்வாகிகள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஜூன் 3 அன்று வடசென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்திலும்; ஜூன் 20ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழாவிலும் தி.மு.க. தொழிலாளர் அணி நிர்வாகிகள் மற்றும் தொழிலாளத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்திய ஒன்றியத்தின் முதன்மையான முதல்வரும் - 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் நல சட்டத்தின்படி 12 மணி நேர வேலை என்பதை 8 மணி நேரம் மட்டுமே வேலை என்பதை மாற்றி தந்து, கழகத் தலைவர் தளபதி அவர்கள் என்றுமே "தொழிலாளர்களின் தோழன்" என்பதை மீண்டும் நிரூபணம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு, தி.மு.க. தொழிலாளர் அணிச் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தான் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டில் தொழில் துறையில் புரட்சி ஏற்படுத்தி, அதன் மூலம் தமிழ்நாட்டை இந்திய துணைக் கண்டத்தில் முதன்மை மாநிலமாக்கிட அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் கழகத் தலைவர் அவர்கள், தற்போது சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று, அதிக முதலீட்டில் புதிய தொழிற்சாலைகளை கொண்டு வரவும், அதன் மூலம் பல இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும் அயல்நாட்டு பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் பாராட்டுதல்களை தெரிவிப்பதோடு, அவரது அயலகப் பயணம் வெற்றி பெற வாழ்த்துக்களையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கழக தொழிலாளர் அணியை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் செயல்படும் வகையில் கட்டமைப்பை ஏற்படுத்த, ஒவ்வொரு ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் பகுதிகளுக்கு மாநில நிர்வாகிகள் சென்று, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் ஒப்புதல் பெற்று, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகத்திற்கான தொழிலாளர் அணி நிர்வாகிகளை தேர்வு செய்து நியமிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தொழிலாளர் விரோதப் போக்கை தொடர்ந்து கடைபிடித்து வரும் பா.ஜ.க. ஒன்றிய அரசு, தான் பதவியேற்ற நாள் முதல் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் விதமாக, தன் கீழ் இயங்கும் வருமானவரித் துறை, அமலாக்கத் துறை மற்றும் சி.பி.ஐ. போன்ற அமைப்புகளை கொண்டு, ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் - நேர்மைக்கு எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கழக தொழிலாளர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 100 அரங்கக் கூட்டங்கள்!

## மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

கிருஷ்ணகிரி, மே 31 -

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 26.05.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், மாநிலத் தலைவர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையிலும், மாநில நிர்வாகிகள், வை.முத்துராஜன் எம். எல்.ஏ., கே.தினகரன், ஆர். சி.எம். விஷ்ணுபிரபு, ஏ. ஆர்.டி.உதயசூரியன், எம். சிவராஜ், ஏ.கே.பூபதி, சி.செல்லதுரை, ராம் குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா"

ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு பங்களிப்பாளர், நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி, தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும், தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட ஓய்வில்லாச் சூரியன், 94 ஆண்டுகால ஆயுட்காலத்தில், 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர், அரைநூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர், இந்தியத் திருநாட்டின் அரசியலின் அச்சாணியாகத் திகழ்ந்தவர், நமது தாய்மொழியாம் உயிரனைய தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று தந்தவர், கவிதைகள், சிறுகதைகள், சினிமாத்துறையில் வசன கர்த்தா, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சீர்மரபினர், முஸ்லீம், கிறிஸ்துவர்களுக்கெல்லாம் தனி இட ஒதுக்கீடு தந்து அடி மட்டத்திலிருந்த மக்களை கை தூக்கி விட்டு, சமூக நீதி காத்த தலைவர், பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளித்து பொருளாதாரத்தில் கைதூக்கி விட்டவர், கை ரிக்ஷாவை ஒழித்தவர், வங்கிகள் தேசிய மயத்தை ஆதரித்தவர், பொதுத்துறையை உருவாக்கி லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து உச்ச நீதிமன்றத்தால் பாராட்டு பெற்றவர், இந்திய திருநாட்டின் பல குடியரசு தலைவர்களை உருவாக்கியவர், பல பிரதம அமைச்சர்கள் பதவி வகிக்க காரணமாக இருந்தவர்,

அமைப்புசாரா நல வாரியங்களை உருவாக்கி பல கோடி அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை அளித்த சீர்திருத்தவாதி, விவசாய பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரம் தந்து 7,000 கோடி கடனை தள்ளுபடி செய்தவர். இந்திய அரசியல் வானில் மிகப் பிரகாசமாக ஒளிர்ந்த நட்சத்திரம்.

இந்திய திருநாட்டின் ஒற்றுமைக்காக பாடுபட்டவர், சீனப்போர், கார்கில் போரில் இந்திய அளவில் முதன் முதலாக 6 கோடி ரூபாய் நிதி அளித்து தேச ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர், தான் போட்டியிட்ட அனைத்து சட்டமன்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர். முதல்வராக 19 ஆண்டு காலம் பணிபுரிந்து நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த நம் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வரும் ஜூன் 3ல் தொடங்கி, ஓராண்டு காலம் தமிழகம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் புகழை எடுத்துக் கூறி பட்டிதொட்டி முதல் நகரங்கள் வரை கலைஞர் புகழ் பரப்பும் வகையில் நூற்றாண்டு விழா கொண்டாடுவதென, தமிழகத்தின் முதல்வர் தளபதியார் அவர்களின் கட்டளைக்கு ஏற்ப தலைமைக்கழகம், மாவட்டக்கழகம் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்து, கலைஞர் புகழ் பாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

"தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் 100 அரங்க கூட்டங்கள்" மாவட்ட கழக செயலாளர்களுடன் கலந்து பேசி கழகத் தலைவர் தளபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட நிர்வாகிகள், அவரவர்கள் தத்தமது மாவட்டங்களில் நமது அணியின் சார்பில், "கலைஞர்100" முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சிகளாக ஏழை எளியோருக்கு உணவளித்தல், வேட்டி சேலை வழங்குதல், தொழு நோயாளிகள் முகாம்களில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் வேட்டி சேலைகள் அளித்தல், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்குதல், "கலைஞர் 100" சிறப்பு நிகழ்ச்சிகளை முன்னிட்டு மரக் கன்றுகள் நடுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை, நிர்வாகிகள் அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு "100 அரங்க கூட்டங்கள்" நடத்திட சம்மந்தப்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்து ஏற்பாடுகள் செய்து அணியின் மாநிலத்தலைவர், செயலாளர் பங்கேற்கும் விதமாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்து நம்முடைய அணியின் பங்கேற்பையும் நம் கழகத் தலைவர் மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் அறிய செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

"மாநகர பகுதி கழகம் நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்புக்கள் உருவாக்குதல்"

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணிக்கு மாவட்ட நிர்வாகிகள் பட்டியல் வெளியாகியுள்ள மாவட்டங்களில் உள்ள, மாநகர பகுதி கழகம், நகர கழகம், ஒன்றிய கழகம், பேரூர் கழக அமைப்புகளுக்கு அந்தந்த மாவட்ட கழக செயலாளர்களுடன் கலந்து பேசி நிர்வாகிகளை உடனடியாக நியமனம் செய்திடும் வகையில், மாநில நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும் உடனடியாக களத்தில் இறங்கி 30 நாட்களுக்குள் நிர்வாக பட்டியலை மாவட்ட அமைப்பாளர் மூலமாக, மாநில தலைமைக்கு அனுப்பி வைத்திட வேண்டும் எனவும்,

அவ்வாறு நியமனம் செய்யப்படும் நிர்வாகிகள் லாரி, தனியார் பஸ், ஆட்டோ, கார், டிராக்டர், பள்ளி, கல்லூரி பேருந்துகளில் ஓட்டுனர்களாக பணியாற்றுபவர்களை தேர்வு செய்தால் நல்லது, போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களையும் நியமனம் செய்யலாம்.

நமது அணியின் சார்பில் நடத்தப்பட்ட நேர்காணலில் கலந்துகொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நிர்வாகிகள் பட்டியலை 30 நாட்களுக்குள் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கழகத் தலைவர், முதல்வர் தளபதியார் அவர்கள் அறிவிக்கப்பட்டுள்ள மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மட்டும் கலந்து கொள்கிற ஆலோசனைக் கூட்டம், கழக துணைப் பொதுச் செயலாளர் நமது அணியின் பொறுப்பாளர் ஆ. ராசா M.P., (முன்னாள் மத்திய அமைச்சர்) அவர்கள் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் ஜூன் முதல் வாரத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

"மாவட்ட அளவில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டங்கள்"

அமைப்பு சாரா ஓட்டுனர் அணிக்கான மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை உடனடியாக கூட்டி ஆலோசனை செய்து, நமது அணியின் நோக்கம், செயல்பாடுகளை விளக்கி கூறியும், உறுப்பினர்களை சேர்ப்பது சம்மந்தமாக, ஆலோசித்து பணிகளை துவக்கிடும் வகையில் மாவட்ட வாரியாக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
மே 31 (2004)



திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.

பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.